

துணை முதல்வராகப் பொறுப்பேற்ற பின் சேலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் இரவு திண்டுக்கல் சென்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் தலைமையில் பரமத்தி வேலூர் எல்லையில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், சாந்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ரங்கசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.செல்வராசு, ஜி.தங்கவேல், கு.பழனிவேல், எம்.தங்கவேல், பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், ஏ.பி. ஆர்.சண்முகம், நாச்சிமுத்து, செல்வம், இளங்கோவன், நகர கழக செயலாளர்கள் கார்த்திகேயன், விஜயகண்ணன், ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் திருமலை, கருணாநிதி, முருகன், ரமேஷ்பாபு, முருகவேல், ராமலிங்கம், கார்த்திராஜ், ராமமூர்த்தி பேரூராட்சிமன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்டமன்ற தொகுதி. இளைஞரணி கலைஞர் நூலகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டு, வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டார். இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ. செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட கழக நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்டமன்ற தொகுதி. இளைஞரணி கலைஞர் நூலகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டு, வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டார். இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி. கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான இ.பெ. செந்தில்குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட கழக நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, சேப்பாக்கம் பகுதி, 62அ வட்டம், சிங்கனத் தெருவைச் சேர்ந்த தொகுதி மக்கள் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன், வட்டச் செயலாளர்கள் மகேஷ், ஜெகதீசன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) முகாம் அலுவலகத்தில், ஆஸ்திரேலியாவின் பெர்த் மாநிலத்திலுள்ள பீனிக்ஸ் அகாடெமியில் நான் முதல்வன் திட்டம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா அரசு இணைந்து நடத்திய தொழிற்சார் மற்றும் மதிப்பீட்டு பயிற்சி பெற்று திரும்பிய அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களிடம் பயிற்சி குறித்து கலந்துரையாடி வாழ்த்துகளை தெரிவித்தார். இந்த நிகழ்வில் துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னொசென்ட் திவ்யா, மேற்கு ஆஸ்திரேலியா அரசு பிரதிநிதி திருமதி.விமலா சீனிவாசன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் (21.10.2024) அன்று சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், இணைகளுக்கு திருமணத்தை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) திருமதி.தி.அனிதா, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாகை மாவட்ட வழக்கறிஞர் சங்க தலைவர் சதீஷ்பிரபு நாகை வருகை தந்த பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.தினேஷ்குமார் மற்றும் வழகறிஞர் அணியினர் உள்ளனர்.